## காஞ்சிபுரம் மாவட்டம் அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் (ITI) சேர்க்கை அறிவிப்பு

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், செங்கற்பட்டு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் கலந்தாய்வு மூலம் பயிற்சியாளர்கள் சேர்க்கைக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் சேரவும், அரசு உதவி பெறும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் சுயநிதி தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் ஆகியவற்றில் அரசு ஒதுக்கீட்டு இடங்களில் சேர்ந்திடவும் மாவட்ட கலந்தாய்வு மூலம் நடைபெறும் பயிற்சியாளர்கள் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் www.skilltraining.tn.gov.in என்ற இணையதளம் வாயிலாக வரவேற்கப்படுகின்றன. தொழிற்பயிற்சி நிலையங்களில் பல்வேறு பொறியியல் மற்றும் பொறியியல் அல்லாத தொழிற்பிரிவுகளில் சேர்ந்து பயிற்சி பெற 8ம் வகுப்பு தேர்ச்சி , 10ம் வகுப்பு தேர்ச்சி மற்றும் 12ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பத்தில் எந்த மாவட்டத்தின் கலந்தாய்வில் கலந்து கொள்ள விரும்புகிறார்கள் என்ற விவரம் குறிப்பிட வேண்டும். ஒரு பயிற்சியாளர் விரும்பினால் பல மாவட்டங்களில் தொழிற்பயிற்சி நிலைய சேர்க்கைக்கு விண்ணப்பிக்கலாம். ஆனால் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனித்தனி விண்ணப்பம் சமர்ப்பிக்க வேண்டும். மதிப்பெண் அடிப்படையில் மாவட்ட கலந்தாய்வுக்கான நிகழ்ச்சி நிரலும் இதே இணையதளத்தில் பின்னர் வெளியிடப்படும். இணையதளத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் எந்தெந்த தொழிற்பயிற்சி நிலையங்களில் மாவட்ட கலந்தாய்வு நடைபெறும் என்ற விவரம் தரப்பட்டுள்ளது. அந்த நிகழ்ச்சி நிரலின்படி பயிற்சியாளர்கள் **Single Window** முறையில் தாங்கள் சேர விரும்பும் தொழிற்பிரிவு மற்றும் தொழிற்பயிற்சி நிலையம் ஆகியவற்றை மாவட்ட கலந்தாய்வில் கலந்து கொண்டு தேர்வு செய்யலாம்.

பயிற்சியாளர்கள் பயன்பெறும் வகையில் விண்ணப்பித்தல் தொடர்பான உரிய அறிவுரைகள் வழங்க செங்கற்பட்டு, அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இணையதளத்தில் பதிவேற்றத்திற்கான கடைசி தேதி : **27/06/2018**. மேலும் விவரங்களுக்கு 044 – 27431242 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

மாவட்ட ஆட்சித்தலைவர்<br>காஞ்சிபுரம்

துணை இயக்குநர்/ முதல்வர்(பொ)

தொலைபேசி எண் : 044 – 27431242

மின் அஞ்சல் : **govtiticpt603111@gmail.com**